சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.209/2022

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – பால்ச்சாமி (Pw5) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மாயலேரி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். சர்வே எண். 91/1A வில் யார் பெயரில் எதன் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் UDR க்கு பின்பு யார் பெயரிலும் பட்டா மாறவில்லை. அதற்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் SLR யை பார்த்தால் தான் தெரிய வரும். சர்வே எண். 91/1B யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் தற்போது முனியாண்டி சேர்வை மகன் பஞ்சாசரம் என்பவர் பெயரில் பட்டா உள்ளது. சர்வே எண். 91/1A வீரபத்திரன் சேர்வை மகன் ராமு சேர்வை என்பவர் பெயரில் பட்டா உள்ளது. கிராம சிட்டாவில் ராமு என்று உள்ளது. அ பதிவேட்டில் ராமு சேர்வை என்று உள்ளது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தற்போது இல்லை :**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.209/2022

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889 ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – வினோத்குமார் (Pw6) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருச்சுழி வட்ட சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் கோரிய ஆவணங்களில் SLR யை தவிர மற்ற ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன். சர்வே எண்.108/2A விற்கு எந்த தேதியில் பட்டா கோரி மனு அளிக்கப்பட்டது என்றால் 26.07.2018 ல் இணைய வழி மூலமாக பத்திர பதிவு அலுவலகத்தில் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு வந்தது. எந்த தேதியில் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் 30.11.2018 ம் தேதி பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சர்வே எண்.108/2A உட்பிரிவு செய்யப்படும் போது அருகில் உள்ள நில உரிமையாளர்களுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பப்பட்டதா என்றால் அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை. பொதுவாக உட்பிரிவு செய்யப்படும் போது அருகில் உள்ள நில உரிமையாளாருக்கு அறிவிப்பு அனுப்பி இடத்தை அளந்து அதன் பின்பு உட்பிரிவு செய்யப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ 22 ஆவணத்தில் பட்டா மாறுதலுக்கு மனு தாக்கல் செய்த தேதி 26.07.2018.

வரைபடத்தில் திருத்தம் செய்யும் சமயத்தில் யாருக்காவது அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் அப்போது அறிவிப்பு அனுப்பமாட்டோம். புல வரைபடம் தயார் செய்யும் போது களத்திற்கு சென்று பார்வையிட்டு அதன் பின்னர் வரைபடம் தயார் செய்வோம். எந்த தேதியில் புல வரைபடம் தயார் செய்யப்பட்டது என்றால் 31.10.2018 ல் தயார் செய்யப்பட்டது. புல வரைபடம் தயார் செய்யும் போது நான்கு மால் பார்த்து கல் எதுவும் நாங்கள் ஊன்ற மாட்டோம். அளந்து மட்டும் தான் காட்டுவோம். சர்வே எண்.108/2A தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் முத்து மகன் பாண்டி என்பவர் பெயரில் பட்டா எண் 1447 ல் உள்ளது. சர்வே எண்.108/2A எந்த தேதியில் நாங்கள் சென்று பார்வையிட்டோம் என்றால் நாங்கள் பார்வையிடவில்லை தானியங்கி மூலமாகவே பட்டா பத்திர அலுவலகத்தில் ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எங்கள் அலுவலகத்தால் சர்வே எண் 91/1A மற்றும் 91/1B ஆகியவை சம்பந்தமாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட தகவல். அது **சா.சா.ஆ 2**. புல எண் 108 சம்பந்தப்பட்ட , புல வரைபடம் **சா.சா.ஆ 3**. UDR அ பதிவேடு **சா.சா.ஆ 4**. UDR பட்டா **சா.சா.ஆ 5**. பட்டா மாறுதல் உத்தரவு **சா.சா.ஆ 6**. கணினி அ பதிவேடு **சா.சா.ஆ 7**. தானியங்கி பட்டா மாறுதல் உத்தரவு **சா.சா.ஆ 8**. இணைய வழி வில்லங்க சான்றிதழ் **சா.சா.ஆ 9**. ஆவண நகல் **சா.சா.ஆ 10**.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தற்போது இல்லை :**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.209/2022

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – ஜெகதீஸ்வரி (Pw7) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

நான் தற்போது முதுநிலை வருவாய் ஆய்வாளராக அருப்புக்கோட்டை, கோட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். வா.சா.ஆ 13 ஆவணத்தின் படி எங்கள் அலுவலகத்தில் யார் மனு கொடுத்தார் என்றால் ராஜசேகரன், த/பெ.பஞ்சாசரம், ம.ஆனந்த், த.பெ.மணி மனு கொடுத்துள்ளார்கள். மனுதாரர்கள் ராஜசேகரன், ஆனந்த், எதிர்மனுதார்கள் ராஜேந்திரன், தேவராஜ் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. புகாரில் திருச்சுழி வட்டம் T.வேளாங்குடி புத்தனேந்தல் கிராமம் சர்வே எண். 108/2B, பரப்பளவு 0.22.48 ஏர்ஸ். நிலம் ஒரு வாரிசுதார் பெயரில் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை ரத்து செய்து மீண்டும் பழைய நிலையான வெள்ளைச்சாமி சேர்வை மகன் வீரபத்திரன் சேர்வை என்பவர் பெயரில் பட்டா தாக்கல் செய்து வழங்குமாறு புகார் கொடுக்கப்பட்டது. நாங்கள் வீரபத்திர சேர்வையின் வாரிசு சான்றிதழ் எதுவும் கொண்டு வரச்சொல்லி வா.சா.ஆ 11 ல் எதுவும் சொல்லவில்லை.

சர்வே எண். 91/1A, 91/1B பட்டா மேல்முறையீடு சம்பந்தமாக வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை 18.02.2023 ம் தேதி வழங்கிய தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவு **சா.சா.ஆ 11**. மேற்படி உத்தரவில் யார் பெயரில் இருந்து யார் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றால் புல எண். 91/1A வீரபத்திரன் சேர்வை மகன் ராமு என்பவர் பெயரிலும், சர்வே எண். 91/1B முனியாண்டி சேர்வை மகன் பஞ்சாசரம் என்பவர் பெயரிலும் தற்போது உள்ள நிலையிலேயே பட்டா தொடர பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பரிந்துரையின் நகல் யாருக்கும் அனுப்பப்படவில்லை. பட்டா ரத்து செய்ய மனு தாக்கல் செய்தால் பட்டா யார் பெயரில் முன்னால் இருந்ததோ அவர்களுக்கும், நிலம் சம்பந்தப்பட்ட உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பி முறையான விசாரணை நடத்தி பட்டா மாறுதல் செய்யப்படும் என்றால் சரிதான். மேற்படி பரிந்துரையில் யாருக்கு அறிவிப்பு அனுப்பி விசாரணை மேற்கொண்டு பரிந்துரைக்கப்பட்டது என்ற விபரம் கண்டுள்ளதா என்றால் மாயலேரி கிராம நிர்வாக அலுவலரை விசாரணை செய்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் ராஜேந்திரன், த.பெ.கணபதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் பாண்டியன் த.பெ.ராமு என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தற்போது இல்லை :**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை